# ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ரநாமம் - தமிழில்

ஓம்
வெண்ணிற ஆடை சூடி
வெண்ணிலா போல் ஒளிர்பவன் !
புன்னகை முகத்தோன் விஷ்ணு
நாற்கரன் பதம் போற்றினேன்...!

வசிஷ்டரின் மகனே சக்தி..
சக்தி மகனார் பராசரர்
பராசரர் மகனார் வ்யாசர்
சுக்ப்ரம்மர் தகப்பனார் !

வ்யாசரே விஷ்ணுவின் ரூபம் !
விஷ்ணு வ்யாசர் ரூபமே !
வசிஷ்டரின் குலமே ப்ரம்ம
ஞானியர் பணிந்தேற்றினேன் !

தொடக்கமும் முடிவும் இன்றித்
தொடர்பவன் பரமாத்மனே !
களங்கிலா தூயோன் எங்கும்
நிறைந்தவன் விஷ்ணு தேவனே !

நினைத்திடும் போதே இந்த
பிறவியின் பிணி நீக்குவான் !
அனைத்திலும் வலிமை கொண்டான்
விஷ்ணுவை தினம் போற்றினேன் !

ஓம் நமோ விஷ்ணுவே ! ஸ்ரீ விஷ்ணுவே !

ஸ்ரீ வைசம்பாயனர் உரைத்தார் !

தர்மத்தின் வழியில் புண்யம்

சேர்த்திடும் வழிகேட்ட பின்...

PSDPRASAD MUSIC

தருமரும் பீஷ்மரிடமே
வினா ஆறு எழுப்பினார் !

பாரிலே தெய்வம் யாதோ?
ஈடிலா தெய்வம் எதோ?
யார்புகழ் போற்றல் வேண்டும்?
யாரினால் சுபம் ஏற்படும்?

தர்மங்கள் பலவாம் அதிலே
எந்த தர்மம் சிறந்தது?
கர்மங்கள் நீக்கியே இந்த
ஜென்மம் தீர்க்க வழி என்னவோ?

பீஷ்மர் பதிலுரைத்தார்.

அகிலத்தின் நாதன் விஷ்ணு
அனந்தன், புருஷோத்தமன்.
அவன் நாமம் ஓர் ஆயிரம்
இன்னல் தீர்க்கும் மந்திரம் !

தினம்தினம் பக்தியாய் அவனை
வணங்கிட நலமாகுமே !
மனம் அது வேண்டும் எல்லாம்
த்யானித்தால் கைகூடுமே !

ஆதியும் அந்தமும் இல்லா
விஷ்ணுவே உலக நாயகன் !
தீதினை, துயரினைத் தீர்ப்பான்
அவனை என்றும் துதிக்கவே...

அகிலத்து உயிர்கட் கெல்லாம்
அவனே புகழ் சேர்க்கிறான் !
அகிலத்து நாதன் விஷ்ணு !
அனைத்துயிர் ஜீவனாகிறான் !

PSDPRASAD MUSIC

தர்மத்தில் சிறந்த தர்மம்
விஷ்ணுவை பணிந்தேற்றலே !
தர்மத்தை அறிந்தோன் அவனே...
தாமரை கண் கொண்டவன் !

ஒளியிலே பேரொளி ஆனோன் !
தவத்திலே மா தவன் ஆனோன் !
ப்ரம்மத்தில் பெரியோன் அவனே !
நானறிந்த தர்ம சீலன்...!

தூய்மையிலே பெருந்தூயோன் !
மங்களத்தில் மா மங்களன் !
உயிர்களின் அழிவிலா அப்பன் !
தேவரின் தேவன் ஆனவன் !

ஆதி யுகம் முதலாய் உயிர்கள்
ஆரம்பம் அவனிடத்திலே !
முடிவிலே ப்ரளயம் போது
முடிவதும் அவனிடத்திலே !

ஜகமிதன் முதலோன் அவனே !
ஜகமிதன் சுமை தாங்குவோன் !
ஹரிஅவன் ஆயிரம் நாமம்
தீர்த்திடும் பெரும் பாவமே !

ரிஷிகளும், முனிவரும் போற்றும்
விஷ்ணுவின் திருநாமமே !
அப்பெரும் ஆயிரம் நாமம்
சொல்கிறேன் கேட்டிடுவாயே !

PSDPRASAD MUSIC

ஆயிரமாம் ஹரி நாமம் !
வேத வ்யாசர் அதன் முனிவர்!
தேவகி மைந்தன் தெய்வம் !
அனுஷ்டுப் என்பதே சந்தம் !

அம்ருதத்திலெழும் கதிர்களே விதையே !
தேவகி தனயனே ஆற்றல் !

சாமவேத ஞானியே மன அமைதியைத் தருவான் !

அங்கும் இங்கும் எங்கெங்கிலும்
உறைந்திடும் மகா விஷ்ணுவே
அசுரரை அழித்திட பலவாய்
ரூபம் கொண்ட புருஷோத்தமன் !

இந்த ஸ்ரீ விஷ்ணுவின் ஆயிரம் நாம ஸ்தோத்திர மகா மந்திரத்திற்கு
ஸ்ரீ வேதவ்யாசரே ரிஷியாய் ஆவார் !
அனுஷ்டப் சந்தம் ஆகும்..
ஸ்ரீ மகா விஷ்ணு பரமாத்மன்
ஸ்ரீமன் நாராயணனே தேவதை !
அம்ருதத்திலெழும் சூர்ய கதிர்களே விதையே !
தேவகி மைந்தனே ஆக்கிடும் ஆற்றல்
படைத்திடும், காத்திடும் தேவனின் உயர் மந்த்ரம்
சங்குடன், சக்கரம், நந்தகி வாளே ஆதாரம் !

சார்ங்கமும், கதையுமே தேவாயுதம்

தெளிந்த தேரோட்டியே இரு கண்கள்
மூவகை சாம வேதமும், சாம வேதியுமே காப்பு
ஆனந்தம் பரப்ரம்மனின் ஆதியே !...
பருவம், காலம், சுதர்சனமே திசையெலாம் காப்பு !

உலக வடிவானவன்மேல் த்யானம்

PSDPRASAD MUSIC

ஸ்ரீ மகா விஷ்ணு விரும்பிடும்
ஆயிரம் நாம ஜபமே நோக்கம் !

தியானம்

Ksheero danya
செழித்திடும் தூயதாய் ரத்தினங்கள்
திருப்பாற்கடல் அதன் மணற்பரப்பிலே...
முத்தால் மாலையாய் ஆசனம்
ஸ்படிக மணி மாலைபோல் மேனி மின்னும்...
பூமழை போலே வெண்முகில் தூவும்
மழையின் திவலையில் மகிழ்ந்திடும் ஸ்ரீ விஷ்ணுவே!
ஆனந்த மாக சங்கு, சக்ரம், கதையும்
ஏந்தி நிற்கும் முகுந்தனே !

நிலமே பாதம் ! விண்ணே நாபி ! வாயுவே ப்ராணன்
சந்திர சூரியரே கண்களாக...
திசையே செவியாம், உலகே சிரமாம் அனலே வாயாம்
கடலே அவனின் அடிவயிறாம் !
வயிற்றோடு சுரர், நரர், நாகர், கந்தர்வர்
எனும் மூவுலகோரும் கொண்டான்...
அந்த ஸ்ரீ விஷ்ணுவை வணங்கியே பணிகிறேன் !

பகவான் வாசுதேவர்க்கு நமஸ்காரம் !

அமைதியின் வடிவன். , அரவணை சயனன்.
நாபிக் கமலன், , தேவ நாயகன்..
உலகாதாரன்..வானம் போன்றோன்..
முகில் நிற வண்ணமானோன்
தாமரைக் கண்ணன்,,லட்சுமியின் கள்வன்
யோகியர் தியான மாகினோன்
பிறவிப் பிணியை நீக்கிடும் நாதனாம்
விஷ்ணுவை வந்திக்கிறேன் !
.



PSDPRASAD MUSIC

மேகம் போல்நிறம் மஞ்சள் பட்டாடை சூடி
ஶ்ரீ வத்ஸம் கௌஸ்துபம் தாங்கும் மேனி !
புண்ணியர் சூழும் தாமரை மலர்விழியோன்
அண்டத்து நாயகன் விஷ்ணுவே வணங்குகின்றேன் !

ஆதி என்றாகி அனைத்திற்கும்...பூமியைத் தாங்குவோனே !
அவதாரம் பலகொண்ட விஷ்ணுவே வணங்குகின்றேன்!

சங்குடன் சக்கரம், மணிக்ரீடம் குண்டலம்
மஞ்சள் பொன்னாடை, தாமரை விழிகளே !
ப்ரகாச கௌஸ்துபம் ஆடிடும் மார்பிலே..
நாற்கரன் விஷ்ணுவை நமஸ்காரம் செய்கிறேன்!

பாரிஜாத தருவின் நிழலில்
தங்க சிம்மாசனம் அமர்ந்த
அகண்ட கண்ணன் மேக வண்ணன்,
அலங்கார அழகனாம்...
நிலவு முகம், நான்கு கரம்
ஶ்ரீவத்ஸ மரு மார்பகம் !
ருக்மணி, சத்யபாமாவுடன்
விளங்கிடும் கிருணணே சரண் !

த்யானம்

PSDPRASAD MUSIC

1. அகிலமானோன்,
2. எங்கும் நிறைந்தோன்,
3. அண்டத்தை அடக்கியாள்வபவன் !
4. அனைத்துயிர் படைத்தோன்
5. அனைத்தையும் காப்போன்
6. அனைத்துயிர் ஆன்மமானவன் !
7. உத்தமன்
8. சத்தியன்
9. ஒப்பிலா தூயன்
10. உலக பரிபாலகன் !
11. முக்தியின் வித்து
12. மாற்றமிலாதோன்
13. முக்கால திருநாயகன்
14. அனைத்துயிர் உறைவோன்
15. களங்கள் அறிந்தோன்
16. அனைத்திற்கும் சாட்சியானவன் !
17. முடிவென்பது இல்லாமல் எப்போதும் நிலைத்திருப்பவன்
18. யோக வழியால் அடைதற்குரியோன் !
19. யோகக் கலையின் தலைவனானவன் !
20. சிம்ம மனிதன்,
21. இயற்கையின் நாதன்
22. இம்மியும் அழிவிலாதவன் !
23. திருமகளின் உடன் உறையோன்,
24. கேசவன் !
25. புருஷோத்தமன் !
26. யாதுமானோன்,
27. என்றும் தூயோன்,
28. ப்ரளயத்தில் அழிக்கின்றவன் !
29. அழிவிலா பொக்கிஷம்
30. அசைக்க முடியான்,
31. அனைத்துயிர் ஆதியானவன் !
32. நிகழ்வன யாவுமாகி..
33. அகிலத்தை ஆள்கின்றவன் !

PSDPRASAD MUSIC

34. பக்தர்க் கருள்வோன்,
35. பரம தேவன்
36. படைப்புகள் மூலமானவன் !
37. சுகமளிப்போன்,
38. சுயம்புவானோன்
39. உலகாளும் ஈஸ்வரன் !
40. செய்திடும் செயல்களுக்கெல்லாம் பலன்களைத் தருகின்றவன் !
41. ஆதியும், அந்தமும் இல்லான்
42. ஆதித்யன்,
43. மலர்க்கண்ணினன் !
44. அனைத்தையும் கடந்தோன்,
45. அனுபவம் அளிப்போன்,
46. அயனைக் காட்டிலும் உத்தமன் !
47. அதிரும் குரலோன்,
48. அமரர் அவர்கோன்,
49. அற்புதன், அதிஉத்தமன்
50. உந்தியில் மலரோன்,
51. உணர்வுகள் வென்றோன்,
52. உலகத்தை படைக்கின்றவன்
53. செயலுமானோன், அதன்விளைவானோன்
54. சிந்தனை தனிலாழ்ந்தவன் !
55. தன்நிலை என்றும் மாறாதிருப்போன் !
56. தொன்மையானோன்,
57. நிரந்தரன்
58. அறிய முடியான்,
59. கரியநீலன்
60. "அரியது" என்றிலாதவன்
61. செங்கண்ணன்,
62. செய்து முடிப்போன்,
63. செல்வத்து திரு நாயகன் !
64. மங்கலன்,
65. மாசிலான்,
66. ஞானி
67. மூவுலகப் பெயர் கொண்டவன் !
68. உயிரினைத் தருவோன்,

PSDPRASAD MUSIC

69. உயிர்த் தலையோன்,
70. உயிரானோன்
71. உயர்ந்தவன் !
72. அண்டத்தின் கருவில் உறைவோன்,
73. பூமியை கருகொண்டவன் !
74. மூலாதாரன்,
75. புவி காப்போன்,
76. மாதவன்,
77. மதுசூதனன் !
78. வில்லில் சிறந்தோன்
79. வீரமிக்கோன் !
80. கூரிய அறிவானவன் !
81. உலகளந்தோன்,
82. உலகெலாம் நிறைந்தோன்
83. வென்றிட முடியாதவன் !
84. செயற்பலன் தருவோன்,
85. உயிர்களில் உறைவோன்,
86. தெய்வங்கள் தெய்வமானவன் !
87. ஈடிலாதோன்,
88. அடைக்கலம் அளிப்போன்,
89. அளவிலா ஆனந்தமானவன் !
90. அண்டத்தின் மூலன்
91. அனைத்துயிர் காரணன்
92. ஆதவன் போல் ஜொலிப்பன்
93. ஆண்டு காலன்,
94. ஆதிசேஷன்,
95. ஞானத்தின் வடிவானவன்
96. எங்கும் உள்ளோன்
97. எல்லாம் அறிந்தோன்
98. என்றும் பிறப்பிலாதவன்
99. பலனானோன்,
100. காரணமானோன்,
101. தன் நிலை வழுவாதவன்
102. அளத்தற்கரியோன்,
103. அன்புடை நெஞ்சன்,

PSDPRASAD MUSIC

104. அனைத்திலும் சம்மானவன்
105. யோகியர் தொழுவோன்,
106. தர்ம வடிவன்,
107. சத்திய உருவானவன்
108. அளவிலாதோன்,
109. மாறாதிருப்போன்,
110. எல்லா உயிரிலும் வாழ்பவன் !
111. அமோக பலன்கள்தருவோன் !
112. தர்மசீலன்,
113. மலர்க்கண்ணன் !
114. தர்மம் காக்கவே தோன்றி வந்தோன் !
115. தர்ம வழியே செல்கின்றவன் !
116. சிரம் பல கொண்டோன்,
117. பெயர் பல கொண்டோன்,
118. உலகத்தை சுமக்கின்றவன்
119. நிலையானோன்,
120. நிரந்தரமானோன்,
121. நிகரிலா ஞானியானவன் !
122. அடைய வேண்டியோன்,
123. அல்லல் தீர்ப்போன்,
124. அறிவின் சுடராய் ஜொலிப்பவன் !
125. வேத வடிவோன்,
126. வேத பொருளோன் !
127. விஷ்வக்சேனன்,
128. ஜனார்தனன் !
129. வேத நினைவோன்,
130. வேத உயிரோன்
131. வேதாந்தன்,
132. வேத நாயகன் !
133. லோக நாதன்,
134. தேவ நாதன்,
135. தர்ம நாதன்,
136. முதற் காரணன் !
137. நான்காத்மன்,
138. நால் வ்யூகன்,

PSDPRASAD MUSIC

139. நாற்கரத்தோன்,
140. நான்கு பல்கொண்டவன் !
141. சகிப்பு மிகுந்தோன்,
142. களங்க மிலாதோன் !
143. வெற்றியின் வடிவானவன் !
144. உணவாய் ஆவோன்
145. ஒளிர்வோன்,
146. போகன்
147. உலகத்திற்கு முன் தோன்றியோன் !
148. உபேந்திரன்,
149. வாமனன்,
150. தூயோன்!
151. உயர்ந்தோன்,
152. பலமிகுந்தவன் !
153. அண்டத்தின் ஆதாரமானோன்
154. செல்வத்தின் பிறப்பிடம்
155. ஆற்றல் வல்லான்,
156. அதிபரி சுத்தன்,
157. அனைத்தையும் ஒன்றாய் நிலைசெய்தவன் !
158. தன்னிலிருந்தே உலகைப் படைத்தோன் !
159. இந்த்ரனை விடவும் உயர்ந்தவன் !
160. நிர்மாணிப்போன்,
161. நிர்வகிப்போன்,
162. நிரந்தர யோகியானவன் !
163. அசுரரை வென்றோன்
164. மெய்ப்பொருளானோன்,
165. வைத்திய வழிசொன்னவன் !
166. அறிந்தோன்,
167. இனியோன்,
168. உற்சாகமானோன்,
169. அறிய முடியா அருந்தவன் !
170. புலனுக்கெட்டா
171. பெரும் மாயன் !
172. பலமிகுந்தோன் !
173. பரமானந்தன் !



PSDPRASAD MUSIC

174. பெரும் வீரன் !
175. பெரும் ஞானி !,
176. பெரும் தீரன்,
177. பராக்ரமன் !
178. சொல்ல முடியா வடிவம் கொண்டோன் !
179. ஜொலிப்பிலே மிளிர்கின்றவன் !
180. வடிவின் சாரம் அளவிட முடியான்
181. வளங்களின் திருநாயகன் !
182. மலை தாங்கியோன்,
183. மண்ணைக் காப்போன்,
184. மகாலட்சுமி இருப்பிடம் !
185. நல்லோர் சேர்வோன்,
186. வில்லில் வீரன்,
187. நல்லின்பம் தருகின்றவன் !
188. ஆநிறை காப்போன்,
189. அறிஞரின் தேவன்,
190. அற்புத ஒளியானவன் !
191. அச்சம் தீர்ப்போன்,
192. அழகு சிறகன்,
193. அனிருத்தன்,
194. அமைதி காப்பவன் !
195. ஆதிசேஷன் தலைவனானோன்,
196. அகிலத்து தந்தையானவன் !
197. தங்கமாய் ஒளிரும் உந்தி சுழியில் தாமரை மலர் பூத்தவன்
198. அந்தமே இல்லா
199. சிம்மன்,
200. அனைத்தையும் பார்த்திருப்பவன் !
201. சொந்தமென பக்தர்களோடு உறவாய் ஆகிநிற்பவன் !
202. என்றுமே பக்தருடனே ஒன்றாய் இணைந்திருப்பவன் !
203. சஞ்சலமின்றி நிலைத்திருப்போன்
204. தடைகள் நீக்கும் நிரந்தரன்
205. உலகெலாம் வியந்தே போற்றும் பெரும் புகழ் கொண்டவன் !
206. வெல்ல முடியான்
207. வேத ஆசான்
208. தேவர்கள் பகை வென்றவன்

PSDPRASAD MUSIC

209. குருவிற்கெல்லாம் குருவானவன்
210. மெய்யோன்,
211. மெய்யில் பராக்ரமன்
212. கண்விழிக்கத் தேவை இல்லான்
213. கண்விழித்தே இருப்பவன்
214. வாக்கின் தேவன்
215. பேரறிவாளன்
216. வனமலர் மாலைசூடியோன்
217. வழிகாட்டி
218. வழிநடத்தும்
219. சமத்துவன்
220. திருநாயகன்
221. உயிர்களின் சுவாசம் தன்னை இயக்கிடும்
222. தலைநாயகன்
223. ஆயிரம் தலையினன்,
224. ஆயிரம் தாளினன்,
225. ஆயிரம் கண் கொண்டவன் !
226. அண்டத்தின் ஆத்மன் ஆனோன் !
227. அற்புத ஒளியானவன் !
228. பிறவிச் சுழலை இயக்கி வைப்போன் !
229. அனைத்திற்கும் மேலானவன்
230. அறியாதோர்க்கு மறைந்திருப்போன்
231. அடிபணிந்தோர் இருள் நீக்குவோன்
232. சுவாச மானோன் !
233. சுடும் தீயோன் !
234. சுழன்றிடும் கால சக்கரன் !
235. தெள்ளிய மனத்தோன்,
236. அண்டம் செய்தோன்
237. நல்லவை தருகின்றவன் !
238. எல்லாம் ஆனோன்,
239. எளியோர் தொழுவோன்
240. நல்லோரைக் காத்துநிற்பவன் !
241. அறியாதோரிடம் தன்புகழ் மறைப்போன் !
242. அறிந்தோர்க் கருள் செய்பவன் !
243. இயக்குவோன், பூமி தாங்கும்

PSDPRASAD MUSIC

244. வராகன்
245. ஸ்ரீநாராயணன் !
246. அறிவினாலே அறியமுடியான் !
247. எண்ணிலா பெயர் கொண்டவன் !
248. அடியார்க்கு புகழை சேர்க்கும் அற்புதன்,
249. பெருந் தூயவன் !
250. வேண்டிய யாவையும் கொண்டோன் !
251. வேண்டுதல் நிறைவானவன் !
252. சித்திகள் தருவோன் !
253. அதன்பலன் தருவோன் !
254. உத்தமனான பெரும் மேன்மையோன் !
255. விரும்பிடும் யாவும் அருளும்
256. விஷ்ணு,
257. தர்மன்,
258. தனித்துவன்
259. தர்மத்தின் படிகள் காட்டி தன்னை சேர வைப்பவன் !
260. தர்மத்தின் மையமாய் தனது நாபியை தான்கொண்டவன்
261. வளர்ப்பவன்,
262. விரிபவன்,
263. ஞானக் கடலாய் ஆனவன்
264. வலிய சொல்லன்,
265. வலிய தோளன்
266. வடிவங்கள் பலகொண்டவன்
267. அருஞ்செல்வன்,
268. அள்ளித் தருவோன்
269. அடியார் தேடும் செல்வமானவன்
270. ஒளியின் கதிராய் எங்கும் பரவி
271. அனைத்திலும் ஒளிர்கின்றவன்
272. இந்திரன் தேவர் ஏற்றும் மகேந்திரன்,
273. மாரூபினன்
274. வலிமை, பொலிவு, ஆற்றல் கொண்டோன்
275. ஜொலிப்பவன்,
276. பரிபூரணன்
277. வாக்கினிலே ஒளிர்கின்ற தெளிவினைத் தான்கொண்டவன் !
278. மந்திர ஒலியோன்,

PSDPRASAD MUSIC

279. சூரிய ஒளியோன்
280. சந்திரன் போல் தண்மயன் !
281. பகலவனுக்கே ஒளியைத் தருவோன்
282. ப்ரணவத்தின் வடிவானவன் !
283. நிலவொளி மூலன்,
284. சூரியன் ஆனோன் !
285. தீயோரைக் கைவிடுபவன் !
286. சம்சாரக் கடலைத் தாண்ட.... வைத்திடும் பாலமானவன் !
287. பிணியைத் தீர்க்கும் மருந்தானோன் !
288. துணிந்தோன், திறனோன், சத்யமானவன் !
289. நேற்று, இன்று, நாளையானோன்
290. காற்றாய் வீசி
291. புனிதம்செய்குவோன் !
292. கருணையின் தீயாய் என்றும் ஒளிர்விட்டு ஜொலிப்பவன்
293. கவர்ந்திழுக்கும் காமன்,
294. அழகன்
295. உவந்தளிக்கும் உத்தமன் !
296. விருப்பங்கள் பலவாய் தந்து அவற்றை நிறைவேற்றுவோன் !
297. தேவர்க்கெல்லாம் தேவனான
298. மாமன்னன், ஈடிலாதவன்
299. யுகங்கள் செய்தோன்,
300. யுகமாய் சுழல்வோன்
301. யோகியர்க்கு காட்சி தருபவன்
302. ப்ரளயத்தில் ஆராவயிற்றோன்,
303. புலன்களுக்குத் தென்படாதவன்
304. ஆயிரமாய் அசுரரை வென்றோன் !
305. மாயைகள் செய்கின்றவன் !
306. அளவிலா வெற்றிகண்ட மாபெரும் மகிமை மிக்கவன்
307. எல்லோராலும் விரும்பப்படுவோன் !
308. எல்லோர் உள்ளும் இருப்பவன் !
309. மயிலிறகன்,
310. நாடுவோர்க்கினியன்,
311. மாயையால் ஒருங்கிணைப்பவன் !
312. அருள்மழை பொழிவோன் !
313. பெருஞ்சினம் விட்டோன் !

314. அல்லார்க்கு சினமூட்டுவோன் !
315. அண்டம் செய்தோன்,
316. அண்டம் காப்போன்,
317. அன்பர் காணிக்கை ஏற்பவன் !
318. உயிர் கொடுப்போன்,
319. உயிர்க் காற்றோன்
320. உலகப் புகழோங்கினோன் !
321. சாராதிருப்போன்,
322. விழிப்புடனிருப்போன்
323. தீராக் கடலின் நீரானவன் !
324. இந்திரன் இளையோன் ஆனோன்
325. புகழ்வழுவா அச்சுதன் !
326. அனைத்துயிர்க்கும் ஆதரவாகி எப்போதும் இருக்கின்றவன்
327. உருகி உருகி பக்தர்க்கருள்வோன் !
328. உலக பாரம் சுமப்பவன் !
329. வாயுவின் இயக்கமானோன் !
330. வரங்களைத் தருகின்றவன் !
331. திரிபுரம் அழித்த நாதன்
332. தர்மத்தின் ஆதரவாளன்
333. ஆதிதேவன்,
334. வாசுதேவன்,
335. ஆதவனாய் ஜொலிப்பவன் !
336. சூரன்,
337. வீரன்,
338. உயிர்கள் நாதன்
339. சம்சாரக் கரை சேர்ப்பவன்..
340. தாமரை மலரைக் கொண்டோன்
341. தாமரை மலர் கண்கொண்டவன் !
342. பக்தர் பக்கம் நின்றிருப்போன்
343. பயம் நீக்கிக் காப்பவன் !
344. அவதாரம் பலவாய் கொண்டோன் !
345. அல்லல்கள் தனை தீர்ப்பவன் !
346. தாமரை விழியோன்,
347. தாமரை வாசன்
348. தாமரைப் பூ உந்தியோன் !

PSDPRASAD MUSIC

349. பெரிதானோன்,
350. பெரிதாவோன்,
351. பெருங்கண்கள் கொண்டவன் !
352. உயிர் காப்போன்,
353. செல்வம் செழிப்போன்,
354. கருடக் கொடி கொண்டவன்
355. உள்ளோடொளிர்வோன்,
356. நிகரிலாதோன்
357. வல்லவன்,
358. நெறியறிந்தவன் !
359. வேள்வியில் அவிசை ஏற்போன் !
360. வென்றிடும்
361. திருநாயகன் !
362. மறைவிலாதோன்
363. மங்கல வடிவன்
364. முக்திக்கு வழி காட்டுவோன்
365. அகிலத்தை வயிற்றில் கொண்டோன்
366. அவதாரம் பல செய்பவன்
367. மன்னிப்போன்,
368. செந்நிறத்தோன்
369. மின்னல் வேகம் கொண்டவன்
370. ப்ரளயத்தில் பெரும்பசிகொள்வோன்
371. காரணன்
372. தாமோதரன்
373. ஆழ்ந்தாரும் அறிய முடியான்
374. அனைத்தையும் தன்னுள் கொண்டவன்
375. விதவிதமாய் உலகம் செய்தோன்
376. உலகத்தை இயங்கச் செய்பவன்
377. மாயையால் தன்நிலை மறைப்போன்
378. பற்றறுப்போன்,
379. பரமேஸ்வரன்
380. செய்வோன்
381. செயற்காரணன்
382. செய்ய வைத்துப் பார்ப்பவன்
383. அகிலத்து அதிசயத்திற்கெல்லாம் கருவாய் இருக்கின்றவன்

PSDPRASAD MUSIC

384. அவரவர் செயல்களுக்கேற்ற இடத்தினை தருகின்றவன்
385. அனைத்துயிரும் இறுதியில் சேரும் புகலிடம் என்றானவன்
386. திடமானோன்
387. த்ருப்தி கொண்டோன்
388. உன்னத தோற்றமானவன்
389. நற்குணத்தான்
390. தூய ஞானி
391. மங்கலக் கண் கொண்டவன்
392. அனைத்திற்கும் அடிப்படையானோன்
393. அகிலம் உணர்ந்த வல்லவன்
394. தனக்குமேல் தலைவன் இல்லான்
395. தர்மத்தின் உருவானவன்
396. தர்மரில் சிறந்த தர்மன்
397. தர்மத்தின் வழி காட்டுவோன்
398. பேராற்றல் கொண்டோர் நடுவே...
399. பெருவீரன்
400. சக்திமான்
401. முக்திக்கு வழியைக் காட்டி
402. முடிவில் தன்னுடன் சேர்ப்பவன் !
403. அன்பும் பாசமும் நிறைந்திருப்போன்
404. அனைவர்க்கும் அறிமுகமானவன்
405. பூமிக்குள் தங்கம்போலே உள்ளத்துள் ஒளிந்திருப்பவன்
406. உயிர் காற்றோன்
407. உயிர் கொடுத்தோன்
408. உலகத்தை புனிதம் செய்யுவோன்
409. மணங்களை சுமக்கும் காற்று
410. மங்காத நிலை கொண்டவன்
411. வைகுந்தன்,
412. ஸ்ரீராமன்
413. பகைவரை வேரறுப்பவன்
414. காலத்தை வரையறை செய்வோன்
415. காலநிலைகளை நிர்வகிப்பவன் !
416. தஞ்சம் நாடி சூழ்ந்தோர்க்கு
417. ஓய்வுதரும் நிழலானவன்
418. உயிர்களனைத்தும் தன்னுள் கொண்டோன்

PSDPRASAD MUSIC

419. ஓம்காரன்,
420. சுதர்சனன் !
421. பக்தர் நெஞ்சில் உறைந்திருப்போன் !
422. அதிவேகன்,
423. பெருந்திறனோன் !
424. அசையா நிலையோன்
425. அண்டமாய் விரிவோன்
426. அதிகாரம் செய்கின்றவன் !
427. கெடாத விதையாய் ஆகி உலகத்தை படைக்கின்றவன்
428. எல்லா உயிரும் நாடிச் செல்லும்
429. தன்னிறைவு கொண்டவன்
430. பெருஞ்செல்வன்
431. பெரும்போகன்
432. பக்தர்க்கு பெரும் பொக்கிஷம்
433. சோர்விலான்
434. விஸ்வரூபன்
435. பூமியின் பாதுகாவலன்
436. நட்சத்திரங்கள் நகர்ந்திட செய்வோன்
437. நட்சத்திரன்
438. நலம் நினைப்பவன்
439. பெருந் தியாகி
440. பெரும் உக்ரன்
441. ப்ரளயம் முடிந்தும் முடியாதவன்
442. தர்மத்துடன் ஒன்றானவன்
443. அனைத்திலும் கைதேர்ந்தவன்
444. யாக வடிவன்
445. யாவும் அறிந்தோன்
446. நல்லோரைக் காக்கின்றவன்
447. இணையில்லா மேதையானோன்
448. அனைத்தையும் கண்காணிப்பவன்
449. தொழுதற்குரியோன்
450. செயல்விசை ஆனோன்
451. தொழத்தக்கோரில் சிறந்தவன்
452. உலகியல் விரும்பிடாதோன்
453. முக்திக்கு வழியானவன்

PSDPRASAD MUSIC

454. சூட்சுமமானோன்
455. சிநேகிதன்
456. சரணடைந்தாரைக் காப்பவன்
457. வேத ஒலிபோல் இனிய குரலோன்
458. கோபமிலான்
459. இன்முகத்தவன்
460. நல்லோர்க்கு இன்பம் தருவோன்
461. அல்லோரை அழிப்பவன்
462. திருவடிவால் உள்ளம் கவர்வோன்
463. திண்தோள் வலியனானவன்
464. செல்வமளிப்போன்
465. செயல் பல செய்வோன்
466. வடிவங்கள் பல கொண்டவன்
467. தனக்குள்ளே அகிலம் கொண்டோன்
468. ரத்தினக் கடலானவன்
469. பக்தர் மேல் அன்பு கொண்டோன்
470. அன்புடையோரைக் காப்பவன்
471. மயங்கவைப்போன்
472. எங்கும் நிறைந்தோன்
473. சுதந்திர செல்வனானவன் !
474. தர்மத்தின் வழியில் செல்வோன்
475. தர்மத்தின் பாதுகாவலன்
476. அதர்மத்தை விலக்கியவன்
477. அதர்மர்க்குத் துன்பம் தருபவன்
478. தர்மத்தைத் தாங்கி நிற்போன்
479. தலைவணங்கி போற்றுதற்குரியோன்
480. அனைத்தையும் கட்டுப்படுத்தும் அற்புதன், கட்டுபாட்டாளன்
481. வேதமறைகள் ஆக்கி வைத்தோன்
482. வேண்டியோர் பிழை பொறுப்பவன்
483. ஆயிரமாய் கதிர்கள் கொண்டோன்
484. காலத்தால் மாறாதவன் !
485. உயிர்களனைத்தின் தலைவனானோன்
486. ஒளிரும் சக்கரம் கொண்டவன் !
487. சத்வ குணத்தான்,
488. முதற் காரணன்



PSDPRASAD MUSIC

489. சிங்கம் போல் வீரமிக்கவன் !
490. தேவரினும் சிறந்த தேவன்
491. தெய்வங்கள் அரசனானவன் !
492. தேவர்கள் நலனைக் காக்கும்
493. தேவகுரு என்றானவன்
494. பேரானந்த போகனானோன்
495. தேக பூதம் காப்பவன்!
496. புராதனன்,
497. பூமிநாதன்
498. புவியியல் வாழ்வை விடுவிப்பவன் !
499. வானரர் தெய்வமானோன் !
500. தாராள பரிசளிப்பவன் !
501. தெய்வீக உணர்வால் மட்டும் அடைந்திட வழிசெய்பவன் !
502. எதிர்பார்ப்புகள் ஏதுமின்றி எல்லா உயிரும் காப்பவன் !
503. சோமன்,
504. சோமபானன்
505. சாத்வீக தத்துவன் !
506. யதுகுலன்
507. மகாப்ரபஞ்சன்
508. சத்தியத்தைக் காப்பவன் !
509. பக்தருக்கு அம்ருதமானோன்
510. அம்ருதத்தைப் பருகுவோன் !
511. தீயோரை பணிய வைப்போன்
512. அனைத்திலும் ஜெயம் கொண்டவன் !
513. ஜீவனானோன்
514. சாட்சியானோன்
515. காவலாகி நிற்பவன்
516. முடிவைத் தருவோன்
517. முக்தியைத் தருவோன்
518. முடிவின்றி விரிகின்றவன்
519. நீரிலே உறையும் கூர்மன்
520. நிகரில்லா விக்ரமன்
521. ஆழியில் துயில்வோன்
522. ஆசைகள் விட்டோன்
523. ஆனந்தம் நிலையானவன் !

PSDPRASAD MUSIC

524. சீரிய தர்மம் செய்வோன்
525. சீறிடும் பகையை வென்றோன் !
526. தவத்திற்குரியோன்,
527. தொழுதற்குரியோன்
528. த்யானிப்பாரை மகிழ்விப்பவன் !
529. பக்தர்க்கின்பன்
530. மன்மதன் தகப்பன்
531. உலகம் மூன்றும் அளந்தவன் !
532. மாமுனியோன்,
533. மாநிறன்,
534. ஆசான்,
535. நானிலம் தனைக் காப்பவன் !
536. மூன்று நிலைக்கும் மூலவன் ஆனோன்
537. முப்பாதன்,
538. மத்ச்ய அவதாரன் !
539. காலனையும் ஆட்டுவித்து தன்வசம் கொண்டிருப்பவன்
540. மகா வராகன்,
541. கோவிந்தன்
542. சக்ரதாரி, கதாயுதன்
543. மங்கல குணங்களைப் படையாய்க் கொண்டோன் !
544. தங்கத்தில் ஜொலிக்கின்றவன் !
545. அறிந்திட முடியான்
546. ரகசியமானோன்
547. வார்த்தையில் அடங்காதவன் !
548. அழகு விழியோன்,
549. அழகன், க்ருஷ்ணன்,
550. அனைத்தையும் அளிக்கின்றவன் !
551. திடமானோன்,
552. தோல்வி காணான்
553. தன்வசம் இழுக்கின்றவன் !
554. தாராள மனதைக் கொண்டோன்
555. மாறா புகழை பெற்றவன் !
556. முடிவிலே அகிலம் தன்னை தன்னுடன் சேர்க்கின்றவன்
557. எளிதிலே உணரமுடியா நிலையிலே இருக்கின்றவன் !
558. தேடிவருவார் துணையாய் ஆவோன்

PSDPRASAD MUSIC

559. தருபோல் நிழலளிப்பவன்
560. மங்கல குணத்தான்,
561. மங்கல பகவன்,
562. மங்கா கதிரவனானவன் !
563. நற்கதி அருள்வோன்
564. நந்தகுமாரன்
565. வனமலர் மாலை சூடுவோன்
566. கலப்பை ஆயுதன்
567. அதிதி மைந்தன்
568. அளவிலா பொறுமை கொண்டவன்
569. அழகிய வில்லைக் கொண்டோன்,
570. அனைத்திலும் பர தத்துவன் !
571. உடைந்த கோடரி கொண்டோன்
572. மறைகளை தொகுத்தளித்தவன்
573. வாமனனாய் வானம் தொட்டோன் !
574. வாக்கிலே வெல்கின்றவன் !
575. கருவாகி வந்தவன் அல்லன்
576. குறைவிலா செல்வம் தருபவன் !
577. தீயன செய்வோர்க்கெல்லாம் தண்டனை தருகின்றவன்
578. சாமவேதன்,
579. சாமகீதன்,
580. சன்யாச வழி சொன்னவன் !
581. மருந்தாவோன்
582. மருத்துவனாவோன்
583. மனதில் அமைதி மிக்கவன் !
584. ஒருமுகன்,
585. ஷாந்தன்,
586. பேரின்பன்
587. ஓங்கிடும் அமைதி போற்றுவோன்
588. போற்றிடும் அடியார் அவரின் பாவங்கள் தீர்க்கின்றவன்
589. இறுதியில் தன்னை அடைய தானே வழியானவன்
590. செய்தோன்,
591. சுந்தர வடிவன்
592. செயல்களுக்கேற்ற பலனளிப்பவன்
593. நிலையான அமைதியைத் தருவோன்

PSDPRASAD MUSIC

594. நீரிலே உறைகின்றவன்
595. அவதார லீலை செய்து ஆனந்தம் தருகின்றவன்
596. லோகத்தின் காவலாளி
597. கோகவர்தன மலை தூக்கியோன்
598. பூதேவி துணைவனானோன்
599. தர்மத்தை விரும்புகின்றவன்
600. பின்வாங்கா நெறியைக் கொண்டோன் !
601. பற்றில்லா பரமாத்மனே !
602. ஸ்ரீபதி
603. ஸ்ரீநிவாசன்,
604. ஸ்ரீவத்ஸ மரு மார்பினன்
605. பக்தரின் செல்வம் காப்போன்
606. மங்கலம் தருகின்றவன்
607. தனக்குள்ளே அகிலம் தன்னை சுருக்கியே வைத்திருப்பவன்
608. மறையறிந்த மறையோர் தன்னில் மகா ஞானி ஆனவன் !
609. திருமகள் கரம் பிடித்தோன்
610. பொருட்செல்வம் அருள்பவன் !
611. லட்சுமி நாதன்,
612. லட்சுமி வாசன்
613. லட்சுமியையே செல்வமாய்க் கொண்டவன் !
614. கர்ம பலனுக் கேற்றவாறு வளங்களை பிரித்தளிப்பவன் !
615. மூவுலகம் தஞ்சமாகும்
616. சத்யானந்தன்,
617. ஸ்ரீதரன்
618. ஐயம் தீர்ப்போன்,
619. அழகு கண்ணன்
620. அற்புத கீர்த்தி பெற்றவன் !
621. கோள்களின்,கணங்களின் நாதன்
622. சச்சிதானந்தன்,
623. சுந்தரன் !
624. அளவிலா ஆனந்தமுடையான்!
625. அடியார்க்கு இரங்குவோன் !
626. அடியாரின் அன்பெனும் கட்டுள் தானாக அடங்குவோன்
627. தன்னிகரில்லா தலைவனானோன்
628. கண்கள் பலவாய் கொண்டவன் !

PSDPRASAD MUSIC

629. தனக்குமேல் தலைவன் இல்லான்,
630. தரையிலே துயில்கொண்டவன் !
631. அணிகலன் பலவாய் பூண்டோன் !
632. அடியார்க்கு செல்வமானவன் !
633. சோகமிலான்,
634. சோகம் தீர்ப்போன்,
635. சாஸ்வதமான நிரந்தரன் !
636. ஒளிர் கதிரோன்
637. ஒளிர்விப்போன்,
638. உலகம் அடைத்த குடம் போன்றவன் !
639. மாசிலா தூயன்
640. ஈடிலாதோன்
641. ப்ரம்மனும் தொழுகின்றவன் !
642. அனிருத்தன்,
643. புனிதம் செய்வோன்,
644. எல்லையிலா சக்தி கொண்டவன் !
645. தீரன்,
646. சூரன்,
647. சூரர்கள் தலைவன்,
648. அழகு சிகையோன் கேசவன் !
649. காலநேமி,
650. கேசியை வென்றோன்
651. தொல்லைகள் தீர்க்கும் ஸ்ரீஹரி !
652. மூவுலகும் ஆளும் ராஜன்
653. மூவுலக சஞ்சாரகன் !
654. விரும்பிடும் யாவும் அளிப்போன்
655. அளித்ததை காத்து நிற்பவன் !
656. தனக்கென விருப்பம் இல்லான்
657. தனஞ்சயன்,
658. அழகானவன் !
659. வர்ணிக்கமுடியா வடிவம் கொண்டோன் !
660. வேதமறைகளை ஆக்கியோன் !
661. சுடரொளியாய் எங்கும் நிறைந்தோன்
662. பகையோரை ஓடவைப்பவன் !
663. இடம், பொருள், காலம் என்னும் எல்லைகள் இல்லாதவன்!

PSDPRASAD MUSIC

664. ப்ரம்மனை படைத்த ப்ரம்மன் !
665. பரப்ரம்மன்,
666. சுதர்மன் !
667. மறை அறிந்தோன்,
668. மறைப்பொருள் அறிந்தோன்
669. மறையோர்க் கன்பானவன் !
670. மறைகளின் ஆசான்
671. ப்ரம்மமானோன்
672. மறைகளைப் போற்றுகின்றவன் !
673. உன்னத செயலோன்,
674. உயர்வழிகாட்டி !
675. மின்னிடும் திருமேனியன் !
676. பக்தரின் உள்ளம் உறைவோன்
677. ஞானியர் பணிந்தேற்றுவோன்
678. வேள்வியின் ஆகுதி ஏற்போன்
679. தியாகம் செய்யும்
680. பெரு வேள்வியோன்!
681. போற்றுதற்குரியோன்,
682. போற்றிப்ரியன்!
683. போற்றுவோரை போற்றுவோன் !
684. போற்றினாலே புண்யம் அளிப்போன்!
685. போரில் களிப்போன்,
686. பூரணன் !
687. போற்றியானோன்
688. ஸ்தோத்திரமானோன்
689. புண்யம் செய்யும் பெரும்புண்ணியன் !
690. வினைகளின் பலன்கள் இல்லான்
691. விரும்பிடும் வரமளிப்பவன் !
692. வளமளிப்போன்
693. வாசுதேவன் !
694. வீடு பேறு அளிப்பவன் !
695. பாற்கடலோன்,
696. பொன்மயமானோன்
697. பக்தரையே பொக்கிஷமாய்க் கொண்டவன் !
698. எட்டுவகை செய்வமும் கொண்டோன் !

PSDPRASAD MUSIC

699. புண்ய தீர்த்தங்கள் மூலமானவன் !
700. வேள்விப் பொருள் தானாகி வேள்வியிலே சேர்பவன் !
701. நல்லதே செய்வோன்,
702. நல்லதே தருவோன் !
703. நல்லவைக்குத் துணையாகுவான் !
704. யாதவ திலகன்,
705. யமுனை தீரன்
706. சூரர்கள் படை கொண்டவன் !
707. மாசிலாதோன்
708. செல்வமானோன்
709. தவசீலோர் கோயிலானவன்
710. பூதகணங்கள் தம்முள் கொண்டோன் !
711. புகழினை அளிக்கின்றவன் !
712. கர்வமிலான்,
713. கர்வமழிப்போன் !
714. கட்டுக்குள் அடங்காதவன் !
715. அனைத்துயிர் ஆன்மனானோன்
716. அக்கினி வடிவானவன்
717. யாராலும் வெல்லமுடியா, அபராஜிதன்
718. வாசுதேவன் !
719. உலகமே உடலாய் கொண்டோன்
720. உயர்ந்தவன்,
721. ஒளிவடிவினன் !
722. பன்முகன்,
723. பற்பல வடிவோன்
724. நிலையான உருவற்றவன் !
725. நூற்றிலே வடிவம் கொண்டோன்
726. எளிதிலே அறியமுடியாதவன் !
727. ஒன்றானோன்,
728. பலவாய் ஆனோன் !
729. ஒப்பிலா பாதுகாவலன் !
730. உலகின் உறவோன்,
731. உள்ளுறையாவோன் !
732. உலகநாதன்
733. மாதவன் !

PSDPRASAD MUSIC

734. சத்தியம் நாடுவோர் நாடும்
735. பொன்மயன்,
736. பக்தர்ப்ரியன் !
737. தெய்வீக நெறியோர் அடைய விரும்பிடும் இலக்கானவன் !
738. ஞானத்தை அகிலம் முழுதாய் பரவிடச் செய்கின்றவன் !
739. வணங்கிடும் பக்தர்க்கெல்லாம் ஞானமும், பக்தியும் வளர்ப்பவன்
740. தங்கநிறத்தோன்
741. தங்கமயத்தான்
742. சந்தனம் மணக்கின்றவன் !
743. அசுரரை வென்றோன்
744. ஆசையை வென்றோன்
745. குறைகளே இல்லாதவன் !
746. இணையிலான்
747. எழில்மிகு மாலன்
748. காற்றின் வடிவாய் நகர்கின்றவன் !
749. பகையோர்கள் அசைக்கமுடியா மாபெரும் வீரனானவன் !
750. மதிப்பிற்குரியோன்,
751. மேதாவி
752. மூவுலகக்கும் ஆதாரமானவன் !
753. ஆணவமிலான்,
754. வேள்வியில் தோன்றுவோன் !
755. ஆன்மீக ஒளி காட்டுவோன் !
756. ஈரேழு உலகின் தலைவன்
757. நேர்மை மிகுந்த சத்தியன் !
758. பூமிக்கு ஆதாரமானோன் !
759. பூரண த்ருப்தி கொண்டவன் !
760. ஒளிமழையோன்
761. ஜொலிக்கின்றோன்
762. முடிவென்ப தில்லாதவன் !
763. பக்தர்கள் அளிப்பதை உவந்தேற்போன்
764. மந்திர வடிவானவன் !
765. ஆயுத ப்ரயோக நிபுணன்
766. அனைத்தையும் ஆட்டுவிப்பவன் !
767. பக்தரின் பகையை வெல்ல பற்பல லீலை செய்பவன் !



PSDPRASAD MUSIC

768. நான்கு வடிவன்,
769. நான்கு கரத்தான்
770. நால்வ்யூகன்,
771. நான்கும் தருபவன் !
772. நான்காத்மன்,
773. நான்கு உணர்வினன்
774. நான்மறையோன்,
775. ஒரே ரட்சகன் !
776. மறு அவதாரன்,
777. உலகியல் வென்றோன்
778. பக்திக்கே பணிகின்றவன்
779. செறிவிலார்க்கு அகப்படாதோன் !
780. யோகியர் உளம் நின்றவன் !
781. எளிதிலே புரிந்துகொள்ள முடியா நிலையில் இருக்கின்றவன்
782. ஒருமுக பக்தியால் மட்டுமே அடைய முடிகின்றவன் !
783. தீதான எண்ணம் கொண்ட பகையோரை வெல்கின்றவன் !
784. அகத்தடை நீக்கினால் மட்டுமே அடைந்திட முடிகின்றவன் !
785. அசுரரும் மயங்கும் அழகோன்
786. அகிலத்தில் போதித்தவன் !
787. போதனை செய்தவழியே தானுமே நடக்கின்றவன் !
788. நூற்பின்னல் வலையைப் போல அகிலத்தை அமைத்துள்ளவன்
789. ப்ரளயத்தில் பின்னல்வலையை, தனக்குள்ளே இழுக்கின்றவன்
790. இந்திரன் பணியும் செய்வோன் !
791. அருஞ்செயல்கள் புரிகின்றவன் !
792. சாத்திரம், மறைகள் எல்லாம் நமக்கென ஆக்கிவைத்தவன் !
793. மீன்வடிவன்,
794. ரத்னநாபன்
795. கருணையாணோன்
796. அதி சுந்தரன் !
797. சம்சாரம் கடந்த உயர்நிலை கொண்டோன்
798. மின்னிடும் எழிற் கண்ணினன் !
799. ஜெயம் கொண்டான்,
800. அனைத்தையும் வென்றான்

801. துதிசெய்தற்குரியவன் !
802. உணவளித்து உயிர்களை எல்லாம் பாலனம் செய்கின்றவன் !
803. பாரதத்தில் தேராட்டி
804. வாக்கிற்கென்றும் அதிபதி
805. ஐம்பூத ஆதியானவன் !
806. தன்நிலை வழுவாதவன் !
807. பாவியர் விழுந்து மூழ்கும் நீரோன் !
808. பளபளக்கும் தங்க மேனியன் !
809. பக்தர்கள் அள்ளிக் கொள்ளும் பொக்கிஷம் போலானவன் !
810. குமுத மலரைச் சூடிக் கொள்வோன் !
811. குந்த மலர்போல்
812. தூயவன் !
813. ஆசிமழை பொழியும் மேகன் !
814. ஆராவமுதன்,
815. யாவும் அறிந்தோன்!
816. எல்லாபுறமும் முகங்கள் கொண்டோன்
817. தனக்குமேல் தேவனிலாதோன் !
818. பக்தர்களுக்கு அமுதமானோன் !
819. பக்தர் பாவம் தீர்ப்பவன் !
820. எளியன்,
821. சித்தன்,
822. தர்ம நோன்பினன்
823. எதிரியைத் துண்டமாக்குவோன் !
824. கைசேர்த்து வணங்கிடுவார்க்கு தேவைகள் தீர்க்கின்றவன்
825. மாறிடும் அண்டம்தனிலே மாற்றம் இல்லாதிருப்பவன்
826. சாணூராசுரனின் ஆட்டத்தை வதம்செய்து முடித்தவன்
827. ஏழு நாவன்,
828. ஆயிரம் கிரணன்
829. ஏழு தீயால் எழுகின்றவன் !
830. ஏழு குதிரை வாகனம் கொண்டோன் !
831. ஏதும் வடிவில்லாதவன் !
832. தனக்கொரு ஒற்றுமை இல்லான்
833. துன்ப,பாவங்கள் இலாதவன் !
834. தர்மநெறி பிறழ்வோர்க்கு அச்சத்தைத் தருகின்றவன்
835. நினைக்க முடியா ஆற்றல் கொண்டோன் !

836. நம்பினார்க் கருள்கின்றவன் !
837. அணுவும் ஆனோன்,
838. அண்டமும் ஆனோன் !
839. அரியதும் ஆனோன்,
840. எளியதும் ஆனோன் !
841. முக்குணமானோன்,
842. நிர்குணமானோன் !
843. அனைத்திலும் மேன்மையானவன் !
844. எதனையும் செய்து முடிக்கும் அளவிலா சக்திகொண்டவன் !
845. தொன்மையான ராஜ்ஜியமாம் அண்டத்தின் அரசனானவன் !
846. தாமரை முகத்தான்
847. தன்னிறைவானோன்
848. மங்கல திருவாயினன் !
849. அண்டத்தை காலத்திற்கேற்ப விரியவும் சுருங்கவும் வைப்பவன் !
850. பாரம் சுமப்போன்,
851. வேதம் புகழ்வோன்
852. யோகத்தின் தலை நாயகன் !
853. முடிவளிப்போன்
854. யோகமானோன்
855. வாயுவின் ஓட்டமானவன் !
856. அமைதியின் சிகரோன்,
857. அழகு சிறகோன்
858. அஞ்ஞானர் இடரானவன் !
859. பக்தர்கள் விரும்பிடும் யாவும் வரமாய் தருகின்றவன் !
860. வில்வித்தை வீரன் சூரன்
861. அல்லார்க்கு முடிவானவன் !
862. எல்லோரும் அடிபணிவோன் !
863. யாருக்கும் அடிபணியாதவன் !
864. கோதண்டன்,
865. முடிக்கும் காலன்,
866. தனுர்வேதம் தந்தவன் !
867. நெறி செய்தோன்
868. இயக்கம் செய்வோன்
869. தேவர்கள் கோனானவன் !



PSDPRASAD MUSIC

870. சத்வ குணன்,
871. சாத்வீகன்
872. சத்தியன்,
873. தர்ம நெறியினன் !
874. அன்பிற்குரியோன்,
875. வந்தனைக்குரியோன்
876. பக்தர் இன்பம் பெருக்குவோன் !
877. பக்தரின் அன்பிற்குரியோன்
878. பக்தர் விருப்பம் தீர்ப்பவன் !
879. பக்தரின் இன்பநிலையை மேலுமே விரிதாக்குவோன் !
880. பரமபதம் அடையும் வழியோன் !
881. பலவிதமாய் ஒளிர்கின்றவன் !
882. கதிரவன்,
883. கதிரின் மூலன்
884. கதிரவனே கண்ணானவன் !
885. உலகத்தில் யாவும் செய்தோன்
886. யாகத்து காணிக்கை ஏற்பவன் !
887. ஜோதியின் வடிவம் ஆனோன்
888. வைகுந்த வழி ஒளியானவன் !
889. நீக்கமற நிறைந்துள்ளோன்
890. பேரானந்தம் அளிப்பவன் !
891. முதன் முதலாய் தோன்றி வந்தோன்
892. தொடராய் அவதரிப்பவன் !
893. இன்னல், துக்கம் என்றிலாதோன்
894. அற்புதன்,
895. பொறுத்தருள்பவன் !
896. உலகம் யாவையும் தாங்கிக்காக்கும் ஆதாரம் என்றானவன் !
897. தொன்மையோன்
898. மிகத் தொன்மையோன்
899. பேரழகு மிளிர்கின்றவன் !
900. மங்கலம் தருவோன்,
901. மங்கலம் செய்வோன்!
902. மகிழ்நிலை மறையாதவன் !
903. மங்கலமானோன்
904. மங்கலம் காப்போன்

PSDPRASAD MUSIC

905. மங்கல வரமளிப்பவன் !
906. சுதர்சனத்தான்,
907. சினம் தவிர்த்தான்
908. உதவிக்கு விரைகின்றவன் !
909. அபயக் குரலார்க்கு ஆறுதல் ஆவோன்
910. ஆயூதம் பல கொண்டவன் !
911. வேத வாக்கினன்
912. வார்த்தையில் அடங்கான்
913. வெற்றித் திருவடி கொண்டவன் !
914. ஒளிர்கின்ற குண்டலங்கள் செவியிலே தரிக்கின்றவன் !
915. இனிதானவன்
916. இளகிய மனத்தான்
917. அழகு கொஞ்சும் வசீகரன் !
918. அச்சமிலான்
919. ஈடிலா ஞானி
920. கணத்தினில் வருகின்றவன் !
921. பக்தரைக் காத்தல் என்னும் பாரத்தை சுமக்கின்றவன்
922. நாமத்தை சொன்னால், கேட்டால் புண்ணியம் சேர்க்கின்றவன் !
923. ஏற்றம் தருவோன்,
924. பெரும் புண்ணியன்..
925. சம்சார பற்றறுப்பவன் !
926. உயிர் தருவோன்
927. எங்கும் நிறைந்தோன்
928. தீயோரை அழிக்கின்றவன் !
929. திசைகள் யாவும் விரிந்த வடிவன்
930. தீய கனவுகள் தகர்க்கின்றவன் !
931. நல்வழி தனைக் காட்டி
932. காத்திடும் தீன ரட்சகன் !
933. அளவிலாப் புகழோன்,
934. எண்ணிலா வடிவோன்
935. ஆழ்ந்த இயல்புள்ளவன் !
936. சினம் கடந்தோன்,
937. ஆணைகள் செய்வோன்
938. சம்சார பயம் நீக்குவோன் !



PSDPRASAD MUSIC

939. ஆதி இலான்,
940. ஆதி ஆனோன்
941. அதர்மர்க்கு பயமளிப்பவன் !
942. படைத்திடுவோன்,
943. படைப்பின் மூலன்,
944. பக்தர்க்கினியோன்,
945. பராக்ரமன் !
946. புவி தாங்குவோன்
947. மங்கல அதிர்வோன்
948. புவிக்கு ஒளியானவன்
949. ப்ராணனனோன்,
950. ப்ரணவமானோன் !
951. பரப்ரம்ம தத்துவன் !
952. தனக்கோர் தலைவன் என்றிலாதோன்
953. தர்மத்தின் வழி செல்வபவன் !
954. மலரின் மொட்டாய் மணமும் கொண்டோன்
955. உலகத்தில் மேலானவன் !
956. ஐம்பூத ஆதாரமானோன்
957. எப்போதும் விழித்திருப்பவன் !
958. உயிரானோன்,
959. உயிரசைவானோன்
960. உயிர்களின் ஜீவனானவன் !
961. பிறப்பிலாதோன்,
962. இறப்பிலாதோன்
963. உலகம் மூன்றும் நிறைந்தவன் !
964. மெய்ப்பொருள் உணர்ந்த தூய மெய்ப்பொருள் தானானவன்!
965. மூவுலகக் கலைகளில் எல்லாம் நிபுணனாய்த் திகழ்கின்றவன்
966. மூவுலகக் கிளைகள் கொண்ட தருவாய் திகழ்கின்றவன்
967. தாத்தனானோன்
968. தாரகனானோன்
969. தரணியை சுமக்கின்றவன் !
970. வேள்வியானோன்,
971. வேள்வி செய்வோன்
972. வேள்வியின் பலனானவன் !
973. வேள்வியேற்போன்,

PSDPRASAD MUSIC

974. வேள்வியில் மகிழ்வோன்
975. வேள்வியை பூர்த்தி செய்பவன் !
976. வேள்வியில் வார்க்கும் அன்னம் ஏற்போன் !
977. வேள்வியால் அடையக் கூடியவன் !
978. வேள்வியின் நாதன்
979. வேள்வி ரகசியன்
980. வேள்வியைக் காக்கின்றவன் !
981. வேள்வியைச் செய்தோன்
982. வேள்வியை முடிப்போன்
983. வேண்டும் உணவாய் ஆகுவோன் !
984. தோற்றக் காரணம் தானாய் ஆகி
985. தோற்றமாகி வந்தவன்
986. அண்ட தேவன்
987. சாம கானன்
988. பக்தர்கள் துயரறுப்பவன்
989. ப்ரம்மனை படைத்தோன்
990. பாவமழிப்போன்
991. தேவகி மகனானவன் !
992. எந்த நிலையிலும் அசரா வீரன்
993. அகிலங்கள் தெய்வமானவன் !
994. சங்கு கொண்டோன்,
995. சக்கரம் கொண்டோன்
996. சக்ரபாணி ஆனவன் !
997. சார்ங்கம் எனும் வில் கொண்டோன்
998. நந்தகி வாள் கொண்டவன் !
999. கௌமோதகி கதையைக் கொண்டோன்
1000. கணக்கிலா ஆயுதம் கொண்டவன் !

PSDPRASAD MUSIC

ஆயுதம் பல கொண்டவனுக்கு வந்தனம் !

வனமாலை, கதையும், வில்லும்

சங்கு,சக்கரம், வாளும் உடையோன்

ஸ்ரீமான் நாராயணன் விஷ்ணு

வாசுதேவன் காத்திடவே..

ஸ்ரீவாசுதேவனே என்றும் காக்க..

***

இவ்விதமாய் மகானான
கேசவன் புகழ்போற்றிடும்
ஆயிரம் திருநாமங்கள்
அற்புதமாய் கிடைத்ததே !

துதியிதை தினமும் கேட்பார், சொல்வார்
துன்பங்கள் இல்லாமலே...

இம்மையிலும், மறுமையிலும்
இன்பமுடன் வாழ்ந்திடுவார் !

அந்தணர் மறையில் சிறப்பார் !
க்ஷத்ரியர் வெற்றி காணுவார் !
வைசியர் செல்வம் கொழிப்பார் !
மற்றவர் சுகம் காணுவார்!

பொருள் வேண்டுவோர் பொருளைப் பெறுவார்
அருள் வேண்டுவோர் அருளைப் பெறுவார்
போகம் நாடுவார், போகமே பெறுவார்

PSDPRASAD MUSIC

சந்ததி கேட்பார், சந்ததி வளர்ப்பார் !

பக்திமானாய் ஸ்ரீவாசுதேவன்,
ஆயிரம் திருநாமங்களை
அனுதினம் கீர்த்தனம் செய்வார்
அளவிலா செல்வம் பெறுவார் !

கீர்த்திகள் மேலும் ஓங்க..
இறுதியில் முக்தியும் அடைவார் !

அச்சமே சற்றும் இல்லா
வீரனாய் பொலிவும் பெறுவார் !

பிணியிலே வாடிடுவோரும்
பலம் கொண்டு குணமாகுவார் !

நோய்களும் தானாய் விலகும்
ரோகப் பிடிகள் தளரவே...

பயம் என்பதே இல்லாதோடும்!
துயர் முற்றிலும் தீர்ந்திடும் !

புருஷர்களில் உத்தமனான
புருஷோத்தமன் விஷ்ணுவின்...

திருநாமங்கள் ஆயிரம் தன்னை
கருத்துடன் நிதம் சொல்லுவார்...

அழகும், அறிவும் மேலும் செறிய
நன்நடத்தை காட்டுவார் !

வாசுதேவன் அருளினாலே
பாவங்கள் விட்டொழிந்திடும் !

ப்ரம்மத்தில் ஒன்றாய்சேரும்

PSDPRASAD MUSIC

தூய ப்ரம்ம நிலை வந்திடும் !

ஸ்ரீ வாசுதேவன் பக்தருக்கு
மங்கலமே என்றென்றுமே !

பிறப்பிறப்பு, பிணிகளாலே
வரும் துன்பம் இல்லையே !

ஆன்ம அமிர்தம், பொறுமை, துணிவு,
ஞாபகத் திறன் கூடுமே !

தைர்யம், அமைதி, பேறும், புகழும்
எளிதாய் கைசேருமே !

பொறாமை, கோபம், பந்தம்
தொடராது விலகுமே !

"புண்ய ஆத்மா" என்றே பக்தர்
பரமனின் அடிசேருவார் !

வாசுதேவன் மகிமையால்தான்
வானம், நட்சத் திரங்களும்..

சூரியன், சந்திரன், கடலும்
பூமியும் நிலைபெற்றதுவே !

சுரர், அசுரர், கந்தர்வர்
யட்சர், நாகர், ராட்சசர்,

அசைவன, அசையா பொருளும்
அந்த கிருஷ்ணனின் கையிலே..

புலன்களும், அறிவும், மனமும்
குணங்களும், திடஆற்றலும்

உடல், உயிர், ஆன்மாவும்

PSDPRASAD MUSIC

வாசுதேவன் வசமானதே !

நன்னடத்தையே முதன்மை என்று
அறநூல்கள் உரைக்குமே !

நன்னடத்தையே அறவழி காட்டும்
அச்சுதனே அறவழியின் காவலன் !

ரிஷியோர், முன்னோர், தேவர்கட்கும்
கோள்களுக்கும் அதன் பலன்களுக்கும்...

அசையும் அசையா பொருட்களுக்கும்
நாரயணனே ஆதி ஆனவன் !

ஜனார்தனன் கருணையால்தான்
வேதம், யோகம், எண்ணியல்..

கலை,அறிவியல் கிளைகள்யாவும்
கிடைத்திட நாம்பெற்றது !

மகாவிஷ்ணு ஒன்றாய் இருந்தும்
எல்லா உயிர்களிலும் நிறைகிறான் !

அழிவும், மறைவும் இன்றி
லோகம் மூன்றும் ஆள்கிறான் !

விஷ்ணு பகவானின் கீர்த்தனை
வ்யாசர் புனைந்த துதியிதனை

படித்திடுவார்க்கு உலகியல் சுகமும்
பேரானந்தமும் கிட்டுமே !

ஜனிக்காதவன், தாமரைக் கண்ணன்
அண்டம் ஆளும் மன்னவன் !

PSDPRASAD MUSIC

அவனைப் போற்றி துதிப்பார்க்கு
தொல்லை ஏதும் இல்லையே !

அர்ஜுனன் உரைத்தான்

தாமரை இலைபோல் அகண்ட விழிகள்
கொண்டவா ! பத்மநாபனே !

உன்னை எப்போதும் வணங்கும் பக்தரை
காத்தருள வேண்டுமே !

ஶ்ரீ பகவான் உரைத்தார்

ஆயிரம் நாமங்கள் சொல்லி
என்னைத் தொழ விழைபவர்

ஒரு பாடல் சொன்னால் கூட
ஐயமின்றி த்ருப்தி கொள்ளுவேன் !

ஒருபாடல் சொன்னாலே த்ருப்தியே !

வ்யாசர் உரைத்தார்

மூவுலகிலும் உயிர்கள் வாழ..
வாசுதேவனே காரணம்..

எல்லா உயிரிலும் உறைவாகும்
ஶ்ரீ வாசுதேவனுக்கு வந்தனம் !

ஶ்ரீ வாசுதேவனுக்கு வந்தனம் !

பார்வதி உரைத்தார்

விஷ்ணுவின் ஆயிரம் நாமம்
அனுதினம் சொல்லமுடியாத..

PSDPRASAD MUSIC

பண்டிதர் மற்றோர்க்கெல்லாம்
வழியேதும் உள்ளதோ?

ஈஸ்வரர் உரைத்தார்

ஶ்ரீராம ராம ராம
என்னும் உயரிய நாமமே

ஆயிரம் திருநாமம் சொன்ன
பலன் தரும் ஒருநாமமே !

ஶ்ரீ ராமநாமமே பெரும்பலன் தருமே !

ப்ரம்மா உரைத்தார்

அந்தமில்லா நிரந்தரனே !
ஆயிரம் வடிவுடையோனே !

ஆயிரம் பதங்கள்,ஆயிரம் கண்கள்
ஆயிரம் கரங்களைக் கொண்டவனே போற்றி !

ஆயிரம் கோடியாய் யுகங்களைச் செய்து
உயிர்களின் ஆன்மம் ஆனவா !

ஆயிரம் நாமங்கள் கொண்டவா
போற்றி ! வணங்கினேன் ! போற்றி ! போற்றி !

ஆயிரம் கோடியாய் யுகங்களைச் செய்பவா போற்றி !

சஞ்சயர் உரைத்தார்

யோகநாதன் கிருஷ்ணன் எங்கோ
வில்வீரன் அர்ஜுன ன் எங்கோ
அதிர்ஷ்டமும், வெற்றியும், வளமும்

PSDPRASAD MUSIC

தங்கிடும் அங்கென்றுமே!

ஸ்ரீ பகவான் உரைத்தார்

ஒருமுகமாய் தொடராய் என்னைத்
தொழுதிடுவோர்க்கு நானுமே

அவரிடம் இல்லாதருள்வேன்
இருப்பதன் காப்பாகுவேன் !

நல்லவை காக்க..அல்லவை அழிக்க...
தர்மத்தை நிலைநாட்டிட..

யுகம் யுகமாய் மீண்டும் மீண்டும்
அவதரிப்பேன் நானுமே!

மனம்விட்டுப் போனோர், பயத்தில் வாழ்வோர்
பெருங்கோரப் பிணியின் பிடியிலே தவிப்போர்

ஸ்ரீமன் நாரணன் நாமம் சொல்லவே
இன்னல்கள் தீர்ந்திட நலம்பெற்று வாழ்ந்திடுவாரே !

உடல், மனம் வாக்கு..புலன் உணர்வாலும்..
புத்தியினாலும், அறியாமலுமே..
நித்தியம் நான்செயும் யாவையும்

ஸ்ரீமன் நாராயணன் பதம் சேர்க்கிறேன் !

,

PSDPRASAD MUSIC